Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM

JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No. C.C.No. 106/2024

Deposition of witness for Prosecution – P.W.3 Date : 25.11.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | குமாரசாமி | Village : | செல்லனூர் |
| Father's Name : | ராமன் | Taluk : | அன்னூர் |
| Age : | 47 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2025 **(Accused present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது செல்லனூரில் குடியிருந்து கூலி வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.2 என் தங்கை, அ.சா.1 அவர் கணவர். நான் அன்னூர் தாலுக்கா அலுவலகம் முன்பு எழுத்தாளராக வேலை செய்கிறேன். கடந்த 10.01.2024ம் தேதி மாலை 07.00 மணியளவில் நான் தாலுக்கா அலுவலகம் அருகே உள்ள பேக்கரியில் டீ குடித்து கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தேன், அங்கு அடிபட்டவர் என் தங்கை மகன் என்று பார்த்தேன். வாழைக்காய் லோடு ஏற்றி வந்த டெம்போ வாகனம் அவர் மீது மோதியிருந்தது. என் தங்கை மகன் ரோட்டினை கடக்க நின்று கொண்டிருந்தபோது அவர்மீது சத்தியில் இருந்து வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். அதன் ஓட்டுநரை அன்று பார்த்தேன், ஆனால் பதற்றத்தில் இருந்ததால் அவரை என்னால் அடையாளம் காண இயலவில்லை. இன்று அவரைப் பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியாது. விபத்திற்கு பின்னர் தலையில் அடிபட்டிருந்த சாலமன் ராஜை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் உடனே சென்று என் தங்கை மற்றும் என் சித்தியை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றேன். இவ்வழக்கு தொடர்பாக என்னை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்விபத்து தொடர்பாக போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். இவ்விபத்து தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும். கேள்விப்பட்டுதான் தெரிந்துகொண்டேன் என்று சொன்னால் சரிதான்.

Sd/- V.Monika

District Munsif cum Judicial Magistrate,

Annur.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.